**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**CC.No.62/2020**

**Prosecution Witness : 8**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : தெய்வம் | **Caste** | : |
| **Father's Name** | : பெரியசாமி | **Calling** | : கூடுதல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : **58/2025** |
| | | **Dated** | : **17.03.2026** |

**17.03.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 11 **திரு. தெய்வம்**. பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 8** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி வேறொரு வழக்கில் சிறையில் உள்ளார்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.07.2019ம் தேதி திண்டுக்கல் தாடிக்கொம்பு காவல் நிலைய குற்ற எண்.308/2019 சட்டப்பிரிவு 379 வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சார்பு ஆய்வாளர் ரபிக் காலை 11.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சிவானந்தம் , சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். பின்பு சாட்சிகள் வாசவி, பெஞ்சமின், ராஜசேகரன், ஜான் பீட்டர் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். விசாரணையில் சம்பவம் உண்மையனெ

தெரியவர எதிரிகளை தேடிவந்த நிலையில் தாலுகா வட்ட காவல் ஆய்வாளராகிய நான் வழக்கினை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 11.09.2019ம் தேதி 12.30 மணிக்கு மா.மூ.கோவிலூர் ரோடு ரயில்வே கேட் அருகே வாகனத்தணிக்கை செய்தபோது TN 39 AU 5148 ஸ்பிலண்டர் இருசக்கர வாகனத்தில் வந்த இருநபர்களை நிறுத்தி விசாரிக்க அவர்கள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாக ஒப்புக்கொண்டார்கள். அவர்களை காரணம் கூறி கைது செய்து எதிரி ஷேக் பரித் என்பவர் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் வெங்கிடுசாமி, மாணிக்கம் ஆகியோர் முன்னிலையில் பதிவுசெய்தேன். 2ம் எதிரி பிச்சைமைதீன் தாமாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் 13.45 மணிக்கு பதிவுசெய்தேன். எதிரி பிச்சைமைதீன் தனது வீட்டின் தாழ்வாரத்தில் வைத்திருந்த சுமார் 5 1/2 பவுன் தங்க தாலி செயினை மேட்டுப்பட்டி அவரது வீட்டில் வைத்து அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி கைப்பற்றி சாட்சிகளிடம் வாக்குமூலம் பதிவுசெய்தேன். எதிரி மற்றும் வழக்குச்சொத்துகளுடன் நிலையம் வந்து பாராவசம் ஒப்புவித்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் அரியவேல் முதல் விசாரணை அலுவலர் சார்பு ஆய்வாளர் ரபீக் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். வழக்குச்சொத்தை படிவம் 91 மூலம் கனம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து RPR.no.164/2019 ஆக பதிவு செய்தேன். பின்பு எனது புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது 379 இதச கீழ் குற்றஇறுதிஅறிக்கை தாக்கல்செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8, 2ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9, அத்தாட்சி அ.சா.ஆ.10 படிவம் -91 அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1யிடம் நகை பறிக்கச்சென்ற உண்மையான குற்றவாளிகள் கிடைக்காத காரணத்தினால் வழக்கை முடிவுக்கு கொண்டுவர இந்த எதிரிகளை சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் பார்வை மகஜர், அத்தாட்சி, ஒப்புதல் வாக்குமூலங்கள் தட்டச்சு செய்யப்பட்டு வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் எதிரிகளிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலம் வாங்கவில்லை என்றாலும் அத்தாட்சியில் எந்தஒரு பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எவ்வித தொடர்பு இல்லை என்றாலும் சரியாக புலன்விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக தகவறாக இறுதிஅறிக்கை தாக்கல்செய்தேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.03.17 14:10:05 +0530

Judicial Magistrate No.II
Dindigul.